# பாடநெறி வழிகாட்டி

# 2023

இதோ,
நான் சகலத்தையும்
புதிதாக்குகிறேன்
வெளி 21:5




கொழும்பு இறையியல் கல்லூரி
தேசங்களின் மறுரூபமாகுதலுக்காக திருச்சபைக்கான வளங்கள்

# கொழும்பு இறையியல் கல்லூரி

*தேசங்களின் மறுரூபமாகுதலுக்காக திருச்சபைக்கான வளங்கள்*

# பாடநெறி வழிகாட்டி
# 2023

உண்மை, நீதி, இரக்கம், பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை போன்றவை இன்று இலங்கையிலே நன்கு பரீட்சயமான சொற்றொடர்களாக அமைந்துள்ளன. இறை அரசின் அடிப்படையாக அமைந்துள்ள இப்பெறுமதிகள் இன்று, எமது தீவின் தாகமாகவும் உருவாகி கொண்டிருக்கிறது. எனவே முன்னொருபோதும் இல்லாத விதத்திலே

> இருள் நிறைந்ததும் நிலையற்றதுமான காலகட்டத்தில் இயேசுவின் சீஷர்கள் வழிகாட்டும் வெளிச்சமாக இருக்க வேண்டிய தருணம் இதுவாகும்.
>
> நம்பிக்கையின்மையின் கூக்குரலின் மத்தியிலே திருச்சபையாகிய நாம், எமது நம்பிக்கையின் தனித்துவமான குரலாக கேட்கப்பட வேண்டிய தருணம் இதுவாகும்.
>
> அதைரியப்படுத்தப்பட்ட மனமுடைந்த மக்கள் சமூகத்திற்கு உலகம் எப்போதும் அறிந்துள்ள ஒரே சிறப்புமிகு செய்தியின் மூலம், பரிசுத்த ஆவியானவரால் நிரம்பிய ஆண்களும் பெண்களும் புத்துயிர் அளிக்க வேண்டிய தருணம் இதுவாகும்!

மறுசீரமைக்கப்பட்ட ஆரோக்கியமான 'பரதீசுவை' காண நீங்கள் வாஞ்சிக்கிறீர்களா? சகலத்தையும் புதிதாக்குவேன் என்று தேவன் கூறிய வார்த்தை வாக்குத்தத்தம் அளிக்கிறது. கொழும்பு இறையியல் கல்லூரியில், தேவனின் வார்த்தையால் வடிவமைக்கப்படுவதில் ஆர்வமுள்ள இறையியல் கற்கும் சமூகத்தின் ஒரு பகுதியாக இருப்பதற்கான வாய்ப்பை நீங்கள் பெறுவதன் மூலமாக, நாம் திருச்சபையாக தேவன் தரும் நிலைமாற்றத்தின் முகவராக காணப்படுவோம்.

2023ஆம் வருடத்தில் கொழும்பு இறையியல் கல்லூரிக்கு வருகை தாருங்கள், நாம் ஒன்றாக இணைந்து ஒரு அமைப்பு மாற்றத்தை செய்வோம். அது நம் வாழ்நாளிலும் அதற்கு அப்பாலும் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும்.

**கொழும்பு இறையியல் கல்லூரியானது:**
**இலங்கை நாடாளுமன்றத்தின் 1971 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தில் இணைக்கப்பட்ட கொழும்பு வேதாகம கல்லூரியினது ஒரே பிரிவும் இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணி (NCEASL) மற்றும் இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் (NCCSL) ஆகியவைகளில் உறுப்புரிமையும், ஆசிய இறையியல் சங்கத்தின் (ATA) கல்விக்கான அங்கீகாரமும் கொண்டது.**

# தொடர்பு கொள்வதற்கான தகவல்

**பதிவாளர்**
செல்வி ரன்மலீ செனவிரத்ன — registrar@cts.lk

**வடகொழும்பு கல்வி நிலையம்** — nc@cts.lk

**ஒருங்கிணைப்பாளர்: கல்வித்திட்டங்கள்**
திருமதி மனீஷா சில்வா — maneesha@cts.lk

**மாணவர் கணக்கியல்** — student.accounts@cts.lk

**மாணவர் புலமைப்பரிசில்கள்** — scholarships@cts.lk

**நூலகம்** — library@cts.lk

**தகவல் தொழில்நுட்பம்**
திரு நிர்மல பெர்னாண்டோ — it@cts.lk

**பிரயோக ஊழியப்பயிற்சி**
கலாநிதி சனத் அத்துகோரள — sanath@cts.lk

**ஆற்றுப்பணி கல்விப்பாடத்திட்டம்**
திருமதி திலினி ஆபிரகாம் — counselling@cts.lk

**முதுமாணிப்பட்ட கற்கைநெறி**
திரு பெர்னாட் கொஸ்தா — ma@cts.lk

**கல்வி முன்னேற்றத்திற்கான தலைவர்**
கலாநிதி மனோ இம்மானுவேல் — mano@cts.lk

**கல்விப்பீடாதிபதி**
போதகர் ரவின் கல்தேரா — ravin@cts.lk

**அதிபர்**
கலாநிதி ஐவோ பூபாலன் — ivor@cts.lk

**+94 11 5524257 | www.cts.lk**

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| | *பக்கம்* |
| **பொதுவான தகவல்கள்** | **4** |
| **தவணை 1: ஜனவரி - ஏப்ரல்** | |
| நேர அட்டவணை - கொஹுவலை | **6** |
| நேர அட்டவணை - வடகொழும்பு | **7** |
| வாரநாள் வகுப்புக்கள் | **8-10** |
| மாலை நேர வகுப்புக்கள் | **11** |
| CTS இன் வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புக்கள் | **12-13** |
| **தவணை 2: ஏப்ரல் - ஜூலை** | |
| நேர அட்டவணை - கொஹுவலை | **16** |
| நேர அட்டவணை - வடகொழும்பு | **17** |
| வாரநாள் வகுப்புக்கள் | **18-20** |
| மாலை நேர வகுப்புக்கள் | **20-21** |
| CTS இன் வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புக்கள் | **22-23** |
| **தவணை 3: செப்டெம்பர் - டிசெம்பர்** | |
| நேர அட்டவணை - கொஹுவலை | **26** |
| நேர அட்டவணை - வடகொழும்பு | **27** |
| வாரநாள் வகுப்புக்கள் | **28-30** |
| மாலை நேர வகுப்புக்கள் | **31** |
| CTS இன் வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புக்கள் | **32-33** |
| **விரிவுரையாளர் விபரங்கள்** | **34-38** |
| **CTS கற்கைநெறிகள்** | **39** |

# பொதுவான தகவல்கள்

**CTS பாடநெறிகள்:**

- பொதுவாக கொழும்பு இறையியல் கல்லூரி பாடநெறியானது, வாரத்திற்கு ஒரு தடவையாக 13 வாரங்களில் நடாத்தப்படும்.
- குறுங்கால பாடநெறியானது, நான்கு முழுநாட்கள் அடங்கிய அதிக எதிர்பார்ப்புள்ள பாடத்திட்டமாகும்.
- பெரும்பாலான பாடநெறிகள் 24 மணித்தியாலங்களை கொண்டதாக அமைந்துள்ளதுடன்; சில 36 மணித்தியாலங்களை கொண்ட பாடநெறிகள் மாத்திரமன்றி 24 மணித்தியால வகுப்பறை பாடவேளையுடன் 12 மணித்தியாலங்களை கொண்ட பிரயோகப்பயிற்சியையும் உள்ளடக்கிய பாடநெறிகளும் உள்ளன.

**பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படும் முறைகள்:**

- **பௌதீகநிலை:** கொஹுவலை மற்றும் வடகொழும்பு CTS வளாகத்தில் நடைபெறும் பாடங்கள்.
- **இயங்கலை:** GoogleMeet அல்லது Zoom வழியாக நடைபெறும் பாடங்கள். இங்கு பாடக்குறிப்புக்களை Moodle வழியாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கு செயற்திறனுடைய இணையத்தள வசதியும் டிஜிட்டல் சாதனமொன்றும் அவசியம்.
- **கலப்புமுறை:** மேற்குறிப்பிட்ட பௌதீகநிலை மற்றும் இயங்கலை ஆகிய இரு முறைகளும் உள்ளடக்கி பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படும். சில வாரங்கள் உங்கள் வகுப்புக்கள் கொஹுவலை CTS வளாகத்திலும், ஏனைய வாரங்கள் இயங்கலை வழியாகவும் நடத்தப்படும். பாடநெறியின் ஆரம்பத்திலேயே உங்கள் விரிவுரையாளர் இது குறித்த அட்டவணையை உங்களுக்கு அறிய தருவார்.

**CTS பாடநெறி கட்டணங்கள்:**

அறிமுக கட்டணம்: ரூ 5000/= ஒரு பாடத்திற்கு

* மிகவும் மானிய விலையில் இறையியல் கல்லூரியானது பாடநெறிகளை மாணவர்களுக்கு வழங்குவதற்கு; நமது ஊழிய பங்காளர்கள் மூலம் பெற்ற தாராளமான நிதியுதவிகளே ஏதுவாக அமைகிறது. இந்நன்கொடையை CTS நன்றியுடன் ஏற்று கொள்வதோடு; இந்த சிறப்பு ஏற்பாட்டிற்கு நல்ல உக்கிராணக்காரர் போல மாணவர்கள் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்.

**CTS பாடநெறிகளுக்கு பதிவு செய்வது எப்படி?**

பூர்த்தி செய்யப்பட்ட பதிவுப்படிவத்தை https://www.cts.lk/online-registration/ எனும் இணையத்தளம் வழியாக அல்லது கொஹுவலை CTS இலுள்ள மாணவர் கணக்கியல் பிரிவிற்கு கையளிக்கவும். பதிவு கட்டணங்களை https://www.cts.lk/payment/ வழியாக, வங்கி பரிமாற்றம், கடனட்டை அல்லது பணத்தினூடாக செலுத்தலாம்.
***தயவு செய்து அவதானிக்கவும்:*** *உங்களது பாடத்திற்கான கட்டணம் முழுமையாக செலுத்தப்பட்ட பின்னரே வகுப்பிற்கான உங்களது ஆசனம் ஒதுக்கப்படும்.*

**முக்கிய கவனத்திற்கு:** CTS பாடநெறி ஒன்றிற்கு முதல் தடவையாக பதிவு செய்பவர்கள் தமது சபை போதகரின் சிபாரிசு கடிதத்துடனேயே பதிவினை மேற்கொள்ள வேண்டும்.

**பதிவு செய்யும் நாட்களும் நேரங்களும்:**

குறிப்பிட்ட தவணைக்கான பதிவு செய்யும் இறுதிநாள் அத்தவணையின் ஆரம்ப தினமாகும்.

***தவணை 1: 2ஆம் திகதி ஜனவரி 2023***
***தவணை 2: 24ம் திகதி ஏப்ரல் 2023***
***தவணை 3: 4ஆம் திகதி செப்டெம்பர் 2023***

*நீங்கள் எந்தவொரு வேலை நாளிலும் (திங்கள்-வெள்ளி) காலை 9.00 - மாலை 4.30 மணி வரை பதிவினை மேற்கொள்ளவும் பாட கட்டணங்களை செலுத்தவும் முடியும்.*

# தவணை 1

## 2 ஜனவரி – 1 ஏப்ரல் 2023

○ பௌதீகநிலை கல்வி | □ இயங்கலை கல்வி | ★ கலப்புமுறை கல்வி

# நேர அட்டவணை: தவணை 1 (கொஹுவல)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| **காலை** | ★ **ஆலோசனை பணிக்கான அறிமுகம்**<br>மு.ப.9:00-11:30<br>கிறிஸ்ரி பாலேந்திரன் | ○ **வேதாகம விளக்கவுரை**<br>மு.ப.9:00-11:00<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | ○ **இலங்கை திருச்சபை வரலாறு**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர்<br>ஐக்கிய வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **வேதாகம இறையியல்**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>ஜுலியன் தேவதாசன்<br>○ **பழைய ஏற்பாட்டிற்கான அறிமுகம்**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>வனஜா ராஜ்குமார்<br>ஆராதனை வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **மத்தேயு எழுதிய நற்செய்தி நூல்**<br>மு.ப.9:00-பி.ப.12:00<br>மகேஸ்வரன் மாணிக்கராஜா |
| **பிற்பகல்** | ★ **உலகை குறித்த உன்னதர் திட்டத்தில் உங்கள் பங்கை கண்டு கொள்ளுதல்**<br>பி.ப.3:00-5:15<br>திரு. ஆ. பிரேம்குமார் | ○ **வாலிபர் ஊழியம்**<br>பி.ப.3:00-5:00<br>இரா. ஹரிஹரன் | ○ **கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபம்**<br>பி.ப.3:00-5:00<br>வி. கிறிஷாசாந்தி சந்ரசேகர் | | |
| **மாலை** | | ★ **பன்முக சமூகத்தில் நற்செய்திப்பணி**<br>பி.ப.6:00-8:00<br>கிறிஸ்துமணி செல்லையா | □ **தலைமைத்துவம்**<br>பி.ப.6:00-8:00<br>நெப்போலியன் பத்மநாதன் | | |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# நேர அட்டவணை: தவணை 1 (வடகொழும்பு)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | | ○ **பிரசங்க பயிற்சி**<br>மு.ப.9:15-11:15<br>கிறிஸ்ரி பாலேந்திரன் | ○ **மாற்கு சுவிசேஷம்**<br>மு.ப.9:15-11:15<br>சுரேஷ் அப்பாத்துரை | | |
| பிற்பகல் | | ○ **வேதாகமத்தில் இருந்து ஜெபிக்க கற்றுக்கொள்ளல்**<br>பி.ப.3:00-5:00<br>கிறிஸ்துமணி செல்லையா | **எபேசியருக்கு எழுதிய நிருபம்**<br>பி.ப.3:00-5:00<br>காமினி ஜயந்த | | |
| மாலை | | ○ **பவுலின் வாழ்க்கை**<br>பி.ப.5:45-7:45<br>மகேஸ்வரன் மாணிக்கராஜா | ○ **புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்**<br>பி.ப.5:45-7:45<br>வனஜா ராஜ்குமார் | | |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தவணை 1 | 2 ஜனவரி – 1 ஏப்ரல் 2023

# வாரநாள் வகுப்புக்கள்

## பௌதீகநிலை கல்வி

| ### வேதாகம விளக்கவுரை | BTh\|Dip கட்டாயம் |
|---|---|
| ஒவ்வொரு சந்ததியிற்கும் நிரந்தரமான தேவனின் வார்த்தையே வேதாகமம் என கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர். ஆகவே நாம் சத்திய வசனத்தை சரியான வகையிலே கையாள வேண்டும் என்பது பாரியதொரு சவாலாகும். வேதாகம விளக்கவுரை வேதாகமத்தில் உள்ள வித்தியாசமான மொழி நடைகளை, அதாவது கவிதை, தீர்க்கதரிசனம், கதை, சட்டம் ஆகியவற்றை விளக்குவதற்கான கோட்பாடுகளை மாணவர்களிற்கு கற்றுத்தரும். | 12 வாரங்கள்<br>நாள்: செவ்வாய்<br>நேரம்: மு.ப.9:00-11:00<br>ஆரம்பம்: ஜனவரி 3<br>புள்ளிகள்: 2<br>விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்** |

| ### வாலிபர் ஊழியம் | BTh\|Dip விருப்பு |
|---|---|
| இளைஞர்கள் விளையாட்டு, வியாபாரம், சினிமா, மது என சகல துறையினரினதும் இலக்காகவும் இலகுவில் திசை திரும்ப கூடியவர்களாகவும் இருக்கின்றார்கள். அதேவேளை பூகோளமயமான உலகில் வாலிபர்கள் குரலும் சக்தியும் மனித சமுதாயத்தின் தன்மையை புரட்சிகரமாக மாற்றி கொண்டிருக்கின்றது. அவர்களின் சக்தியையும் விசேட தேவைகளையும் புரிந்து கொள்ளவும், கிறிஸ்துவிற்காக வெற்றி கொள்ளவும், கிறிஸ்துவின் சேனையில் சேர்க்கவும், பயிற்றுவித்து நிலை நிறுத்தவும் இப்பாடநெறி வழிகாட்டும். | 12 வாரங்கள்<br>நாள்: செவ்வாய்<br>நேரம்: பி.ப.3:00-5:00<br>ஆரம்பம்: ஜனவரி 3<br>புள்ளிகள்: 2<br>விரிவுரையாளர்: **இரா. ஹரிஹரன்** |

| ### இலங்கை திருச்சபை வரலாறு | BTh\|Dip கட்டாயம் |
|---|---|
| இலங்கையில் கிறிஸ்தவ மரபுரிமையின் மதிப்பை உணர்ந்து கொள்ள அபூர்வமானதொரு தருணம். இப்பாடநெறியினூடாக இலங்கையில் கிறிஸ்தவம் அறிமுகப்படுத்தப்பட்ட நாள் முதல் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர், அமெரிக்க தூதுப்பணியாளர்கள் போன்றோருடைய செயற்பாடுகளை அவதானிப்பதன் ஊடாக தற்போது இலங்கையிலுள்ள சபையின் பல விதமான அமைப்புகள் எவ்வாறு உருவானது என்பதை குறித்தும் அறியக்கூடியதாக இருக்கும். | 12 வாரங்கள்<br>நாள்: புதன்<br>நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30<br>ஆரம்பம்: ஜனவரி 4<br>புள்ளிகள்: 2<br>விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்** |

# வாரநாள் வகுப்புக்கள்

## பௌதீகநிலை கல்வி

### கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபம்

இந்த நிருபமானது சரியாகவும் தவறாகவும் மிக அதிகமாக மேற்கோள் காட்டப்பட்டு வருகின்றது. அதிலுள்ள பல விடயங்கள் கிறிஸ்தவர்கள் மத்தியில் சூடான விவாதங்களுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. திருச்சபையில் எழக்கூடிய ஒழுக்க மற்றும் கலாச்சார ரீதியான பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகளையும் முன்வைக்கும் இந்த நிருபத்தின் படிப்பினைகள் இன்றைய திருச்சபைக்கு மிகவும் அவசியமானவையாகும்.

**BTh|Dip விருப்பு**

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.3:00-5:00

ஆரம்பம்: ஜனவரி 4

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**வி. கிறிஷாந்தி சந்ரசேகர்**

### வேதாகம இறையியல்

இப்பாடமானது பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு எழுத்துக்களில் வலியுறுத்தப்பட்டிருக்கும் முக்கிய இறையியல் போதனைகளை உள்ளடக்கியதாகும். தேவன் யார் என்பதை குறித்தும் அவர் எவ்வாறு சிருஷ்டிப்பிலும், புதிய சிருஷ்டிப்பிலும் அவரின் திட்டத்தை வெளிப்படுத்துகின்றார் என்பதை குறித்தும் ஆழமாக அறிய உதவும்.

**BTh கட்டாயம்**
**Dip விருப்பு**

12 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12.30

ஆரம்பம்: ஜனவரி 5

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

### பழைய ஏற்பாட்டிற்கான அறிமுகம்

பழைய ஏற்பாட்டை புரிந்து கொள்வது கடினமாக உள்ளதா? கவலை வேண்டாம்! இப்பாடம் பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு நூலினதும் ஆசிரியர், செய்தி, கட்டமைப்பு, பிரதான கருப்பொருட்கள் மற்றும் வரலாற்று சூழ்நிலை ஆகியவற்றை குறித்து சிறந்த கண்ணோட்டத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள துணை புரியும். இயேசு கிறிஸ்துவின் கைகளில் தவழ்ந்த வேதாகமத்தில் உள்ளடங்கியிருந்த பல வகைப்பட்ட நூல்களின் பெறுமதியை உணரவும் அனுபவிக்கவும் இப்பாடம் உதவியாக அமையும்.

**BTh|Dip கட்டாயம்**

12 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30

ஆரம்பம்: ஜனவரி 5

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

## தவணை 1 | 2 ஜனவரி – 1 ஏப்ரல் 2023

# வாரநாள் வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

### மத்தேயு எழுதிய நற்செய்தி நூல்

BTh கட்டாயம்
Dip விருப்பு

கிரேக்க வேதாகமத்தில் இந்நூலின் இலக்கிய நடை அற்புதமானது. நான்கு நற்செய்தி நூல்களும் தனித்துவமான செய்திகளை கொண்டிருக்கின்றன. இப்பாடமானது மத்தேயு நூலின் முக்கிய அம்சங்களை நோக்குவதாடு அதன் மையக்கருப்பொருளான தேவனுடைய இராஜ்யம், மலைப்பிரசங்கம், மற்றும் இயேசுவின் போதனை, தனித்துவமிக்க உவமைகள், நூலின் அமைப்பு, அதன் அருட்பணிக்கான செய்தி என்பவற்றை கண்ணோக்கும்.

08 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:00

ஆரம்பம்: ஜனவரி 13

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**மகேஸ்வரன் மாணிக்கராஜா**

## கலப்புமுறை கல்வி

### ஆலோசனைப்பணிக்கான அறிமுகம்

BTh|Dip கட்டாயம்

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தமது அன்றாட வாழ்வில் குழம்பிய, களைப்புற்ற, காயப்பட்ட மக்களுடன் ஈடுபட வேண்டியிருக்கின்றது. நீங்கள் அப்படியான மக்களுக்கு உதவ வேண்டாமா? இப்பாடமானது ஆலோசனை பணிக்கான வேதாகம அடிப்படையையும், அறிவையும் உங்களுக்கு வழங்கி, அப்பணிக்கு உங்களை தயார்படுத்தும்.

10 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: ஜனவரி 9

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்ரி பாலேந்திரன்**

### உலகை குறித்த உன்னதர் திட்டத்தில் உங்கள் பங்கை கண்டு கொள்ளுதல்

BTh|Dip விருப்பு

உலகை குறித்து தேவன் மகத்தானதொரு திட்டத்தை கொண்டுள்ளார். அந்த திட்டத்தில் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு பங்கை வைத்துள்ளார். ஆகவே நாம் யாராயிருந்தாலும் (முழு நேர ஊழியர், தொழில் புரிபவர், வியாபாரம், மாணவர்) அவரது திட்டதில் எமக்கும் முக்கியமான பங்குண்டு. ஆண்டவர் தனது உன்னத திட்டத்தின் கீழ் உங்கள் வாழ்வை குறித்து வைத்திருக்கும் திட்டத்தை அறிந்துகொள்ளவும் அதில் இணைந்து கொள்ளவும் இப்பாடம் உதவுகிறது.

11 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: பி.ப.3:00-5:15

ஆரம்பம்: ஜனவரி 2

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**திரு. ஆ. பிரேம்குமார்**

## தவணை 1 | 2 ஜனவரி – 1 ஏப்ரல் 2023

# மாலைநேர வகுப்புக்கள்

## இயங்கலை கல்வி

### தலைமைத்துவம்

**BTh|Dip கட்டாயம்**

இன்றைய சமூகம் தலைமைத்துவம் குறித்த சிந்தனைகளால் நிறைந்திருக்கின்றது. வேதாகம ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைமைத்துவ கோட்பாடுகள் எவை என்பதை ஒரு கிறிஸ்தவன் எவ்வாறு இனங்காண முடியும்? இப்பாடநெறியானது உங்களுடைய ஊழியம், வேலைத்தளம், வீடு போன்ற சூழ்நிலைகளில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தலைவனாக சிறந்து விளங்க முடியும் என்பதை கற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கின்றது.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.6:00-8:00

ஆரம்பம்: ஜனவரி 4

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**நெப்போலியன் பத்மநாதன்**

## கலப்புமுறை கல்வி

### பன்முக சமூகத்தில் நற்செய்தி பணி

**BTh|Dip கட்டாயம்**

இயேசு மட்டுமா இரட்சிப்பிற்கான ஒரே வழி? வேறு மதங்களையும் வாழ்க்கை முறைகளையும் பின்பற்றுகின்ற மக்கள் மத்தியில் இப்படி பிரத்தியேகமானதும் குற்றமாக கருதப்படக்கூடியதுமான செய்தியினை பறை சாற்றலாமா? இந்த பாடநெறியானது சுவிசேஷத்தின் இருதய துடிப்பை உணர வைப்பதுடன் செல்வாக்குள்ள வட்டாரத்திற்குள் கிறிஸ்துவின் செய்தியை தாக்கமுள்ள விதத்தில் பகிர்ந்து கொள்ளவும் உங்களை ஆயத்தப்படுத்தும்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.6:00-8:00

ஆரம்பம்: ஜனவரி 3

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்துமணி செல்லையா**

### தவணை 1 | 2 ஜனவரி – 1 ஏப்ரல் 2023

# CTS இன் வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புக்கள்

### பௌதீகநிலை கல்வி

## பிரசங்க பயிற்சி

BTh|Dip விருப்பு

கூட்டு ஆராதனையில் பிரசங்கம் பிரதான இடத்தை வகிக்கின்றது. வாழ்வை மாற்றக்கூடிய உற்சாகமான பிரசங்கங்களை நாம் எவ்வாறு மேற்கொள்ள முடியும்? பிரசங்கங்களை உருவாக்கும் உபாயங்களிலும் பிரசங்க கலையிலும் நீங்கள் பயிற்சி பெற இதுவொரு அரிய சந்தர்ப்பம். இந்த பாடநெறியானது தாக்கமுள்ள விதத்தில் தேவனுடைய வார்த்தையை தெளிவாக பகிர்ந்து கொள்ளும் ஒருவராக நீங்கள் மாற உதவி செய்யும்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:15-11:15

ஆரம்பம்: ஜனவரி 3

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்ரி பாலேந்திரன்**

## வேதாகமத்திலிருந்து ஜெபிக்க கற்றுக்கொள்ளல்

BTh|Dip விருப்பு

எமது ஜெப வாழ்விற்கான சிறந்த முன்மாதிரி இயேசு கிறிஸ்து. இந்த பாடமானது இயேசு கிறிஸ்துவினுடைய ஜெப வாழ்க்கையையும் வேதாகமத்திலுள்ள தேவ மனுஷர்களின் ஜெபங்களையும் குறித்து ஆராய்கின்றது. இந்த பாடமானது நாம் எப்படி ஜெபிக்க வேண்டும்? எதற்காக ஜெபிக்க வேண்டும்? மற்றவர்களை ஜெபத்தில் வழிநடத்துவது எப்படி? போன்ற பல கேள்விகளுக்கான பதிலாகவும் அமையும்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.3:00-5:00

ஆரம்பம்: ஜனவரி 3

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்துமணி செல்லையா**

## மாற்கு சுவிசேஷம்

BTh|Dip விருப்பு

கிறிஸ்துவையும் அவருடைய செயல்களையும் போதனைகளையும் அறிந்து அவற்றின் அடிப்படையில் நமது விசுவாசத்தையும் வாழ்க்கையையும் அமைத்து கொள்ள நற்செய்தி நூல்கள் அடிப்படையானவையும், அவசியமானவையுமாகும். மாற்கு சுவிசேஷமானது தேவனுடைய குமாரனும் இரட்சகருமாகிய கிறிஸ்துவையும் அவரது செயல்களையும், நேரடியாகவும், தெளிவாகவும், சுருக்கமாகவும், இலகுவாகவும் அறியத்தருகிறது. தன்னுடைய இலக்கை நோக்கி அமைதியாகவும் உறுதியாகவும் துரிதமாகவும் முன்னேறும் ஒரு செயல்வீரனாக இயேசுவை சித்தரிக்கிறது. இது கற்றுக்கொள்பவர்களை உடனே அதன்படி செயற்பட தூண்டும்!

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:15-11:15

ஆரம்பம்: ஜனவரி 4

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**சுரேஷ் அப்பாத்துரை**

தவணை 1 | 2 ஜனவரி – 1 ஏப்ரல் 2023

# CTS இன் வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புக்கள்

## பௌதீகநிலை கல்வி

BTh | Dip விருப்பு

### எபேசியருக்கு எழுதிய நிருபம்

"நிருபங்களின் இராணி", "பவுலின் எழுத்துக்களின் மகுடம்" என வர்ணிக்கப்படும் இந்நிருபம் சீர்திருத்தவாதிகளின் அபிமானத்திற்குரியது. பழையவைகளை ஒழித்து எல்லாவற்றையும் புதுப்பிக்கும் சுவிசேஷத்தின் வல்லமையையும் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தும் இந்நிருபம் இரட்சிப்பு, திருச்சபை, கிறிஸ்தவ வாழ்க்கை தொடர்பான உங்கள் கண்ணோட்டத்தை மாற்றக்கூடியதுடன் வாஞ்சையோடு கற்றுக்கொள்ளும் எந்த கிறிஸ்தவனையும் சபையையும் உயிர்ப்பூட்டவல்லது!

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.3:00-5:00

ஆரம்பம்: ஜனவரி 4

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**காமினி ஜயந்த**

BTh | Dip விருப்பு

### பவுலின் வாழ்க்கை

புதிய ஏற்பாட்டில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு பின், பவுலின் வாழ்க்கை முக்கிய பங்கு வகிக்கின்றது புதிய ஏற்பாட்டு எழுத்துக்களிலும் போதனைகளிலும் இவருடைய ஆதிக்கமே அதிகமாக காணப்படுகின்றது. பவுலின் வாழ்க்கை அர்ப்பணிப்புடனும் கிறிஸ்துவை பற்றும் விசுவாச வாழ்க்கைக்கு ஓர் முன்னுதாரணமாகவும், கிறிஸ்துவை பின்பற்றும் ஒவ்வொருவருக்கும் தைரியத்தையும் ஊக்கத்தையும் அளிப்பதுடன், கிறிஸ்தவ தலைமைத்துவத்திற்கான பண்புகளுடனும் வாழ்ந்து வந்துள்ளதை புதிய ஏற்பாட்டில் அநேகமாக காணலாம். இவருடைய வாழ்க்கையை கற்று பின்பற்றுவதனூடாக, எமது வாழ்க்கையிலும் ஊழியத்திலும் ஒரு மிக சிறந்த கிறிஸ்தவ பயணத்தை மேற்கொள்ள முடியும் என்பதை உறுதிப்படுத்தும் அதேசமயம் இப்பாடம் உங்கள் வாழ்க்கையில் ஒரு மிக சிறந்த அனுபவமாக அமையும்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.5:45-7:45

ஆரம்பம்: ஜனவரி 3

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**மகேஸ்வரன் மாணிக்கராஜா**

BTh | Dip கட்டாயம்

### புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்

புதிய ஏற்பாட்டு நூல்கள் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்பதை கற்றுக்கொள்வதோடு ஒவ்வொரு நூலினதும் எழுத்தாளர், செய்தி, கட்டமைப்பு, பிரதான கருப்பொருட்கள் மற்றும் சரித்திர பின்னணி ஆகியவற்றை குறித்து சிறந்த கண்ணோட்டத்தை பெற்றுக்கொள்ள துணை புரியும். இயேசு கிறிஸ்துவின் போதனைகளையும் ஆதித்திருச்சபையின் வரலாற்றையும் கொண்டிருக்கும். பல்வகைப்பட்ட நூல்களின் பெறுமதியை உணரவும், அனுபவிக்கவும் இந்த பாடம் உதவியாக அமையும்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.5:45-7:45

ஆரம்பம்: ஜனவரி 4

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

# தவணை 2

# 24 ஏப்ரல் – 31 ஜூலை 2023

○ பௌதீகநிலை கல்வி | ◻ இயங்கலை கல்வி | ★ கலப்புமுறை கல்வி

# நேர அட்டவணை: தவணை 2 (கொஹுவல)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| **காலை** | ○ **பிரபலமான ஆசிய கிறிஸ்தவர்களின் வாழ்க்கை சரிதைகள்**<br>மு.ப.9:00-11:30<br>எஸ். கதிரேசப்பிள்ளை | ◻ **வழிபாடு பற்றிய இறையியல்**<br>மு.ப.9:00-11:00<br>நெப்போலியன் பத்மநாதன் | ○ **பரிசுத்த ஆவியானவரின் ஆட்தத்துவமும் செயற்பாடும்**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>ஜுலியன் தேவதாசன்<br>ஐக்கிய வேளை மு.ப.10:30-11:30 | ○ **கற்கை முறைகள்**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>செல்லதுரை ஜோ. சந்திரசேகர்<br>ஆராதனை வேளை மு.ப.10:30-11:30 | ○ **கிறிஸ்தவ கோட்பாடுகளின் வரலாறு**<br>மு.ப.9:00-11:15<br>ஜுலியன் தேவதாசன் |
| **பிற்பகல்** | | ○ **ஏற்பாடுகளுக்கு இடையிலான இலக்கிய நூல்கள்**<br>பி.ப.3:00-5:00<br>கே. யாபேஸ் | ★ **அதிர்ச்சிக்கு உள்ளானவர்களின் மன காயங்களை குணமாக்கல்**<br>பி.ப.3:00-5:00<br>ப. காந்தன் | ○ **வெளிப்படுத்தின விசேஷம்**<br>பி.ப.3:00-5:00<br>காமினி ஜயந்த | |
| **மாலை** | | ★ **ரோமருக்கு எழுதிய நிருபம்**<br>பி.ப.6:00-8:00<br>இரா. ஹரிஹரன் | ★ **மெய்யியலுக்கான அறிமுகம்**<br>பி.ப.6:00-8:00<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | ★ **கலாச்சாரம் கடந்த திருத்தூதுப்பணி**<br>பி.ப.6:00-8:00<br>திரு. ஆ. பிரேம்குமார் | ◻ **சிறு குழுவொன்றை வழிநடத்தல்**<br>பி.ப.6:00-8:15<br>ம. தர்ஷன் |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# நேர அட்டவணை: தவணை 2 (வடகொழும்பு)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | | **ஏசாயா**<br>மு.ப.9:15-11:15<br>காமினி ஜயந்த | **பிலிப்பியர் நிருபத்தை கற்பித்தல் மற்றும் பிரசங்கித்தல்**<br>மு.ப.9:15-11:15<br>ராம் ஆறுமுகம் | | |
| பிற்பகல் | | **துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவருக்கான ஊழியம்**<br>பி.ப.3:00-5:00<br>வனஜா ராஜ்குமார் | **கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் தொடர்பாடல்**<br>பி.ப.3:00-5:00<br>இரா. ஹரிஹரன் | | |
| மாலை | | **பழைய ஏற்பாட்டிற்கான பின்னணி**<br>பி.ப.5:45-7:45<br>மகேஸ்வரன் மாணிக்கராஜா | **எஸ்றா - நெகேமியா**<br>பி.ப.5:45-7:45<br>கிறிஸ்துமணி செல்லையா | | |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## தவணை 2 | 24 ஏப்ரல் – 31 ஜூலை 2023

# வாரநாள் வகுப்புக்கள்

## பௌதீகநிலை கல்வி

| | |
|---|---|
| **பிரபலமான ஆசிய கிறிஸ்தவர்களின் வாழ்க்கை சரிதைகள்**<br>ஆசியாவின் மிகுந்த செல்வாக்குள்ள கிறிஸ்தவர்களின் வாழ்க்கையும் அவர்கள் எமக்கு விட்டு சென்ற மரபுரிமை பண்புகளையும் குறித்து கற்றுக்கொள்வதற்கான அரிய வாய்ப்பு. இந்த பாடமானது வி.எஸ் அசரியா, பண்டித ராமாபாய், ரோயோஹிகோ கஹுவா, ஜோண் சுங், டி. ரி நைல்ஸ், லக்ஷ்மன் விக்கிரமசிங்க போன்ற பெரும் ஆன்மீக தலைவர்கள் பலரை உங்களுக்கு அறிமுகப்படுத்துகின்றது. | **BTh\|Dip விருப்பு**<br>10 வாரங்கள்<br>நாள்: திங்கள்<br>நேரம்: மு.ப.9:00-11:30<br>ஆரம்பம்: மே 8<br>புள்ளிகள்: 2<br>விரிவுரையாளர்:<br>**எஸ். கதிரேசப்பிள்ளை** |

| | |
|---|---|
| **ஏற்பாடுகளுக்கு இடையிலான இலக்கிய நூல்கள்**<br>ஏற்பாடுகளுக்கு இடையிலான இலக்கிய நூல்கள் பழைய, புதிய ஏற்பாடுகளுக்கிடையேயான 400 வருடங்களே "அமைதியான வருடங்கள்" என அழைக்கப்படுகிறது. இந்த காலகட்டத்தில் அநேகமான இலக்கியங்கள் மலர்ந்தன. அந்நியர் ஆதிக்கத்தின் கீழிருந்த இஸ்ரவேலர் தாம் முகம் கொடுத்த புதிய சவால்களுக்கு தங்களின் விசுவாசத்தை பிரயோகிக்க இந்த இலக்கியங்களே துணை புரிந்தன. இந்த பாடநெறியில் அவ்வாறான முக்கிய எழுத்துக்களையும், தள்ளுபடியாகமங்கள், போலியாகமங்கள் மற்றும் சாக்கடல் சுருள்கள் ஆகியவற்றை அவற்றின் சரித்திர பின்னணியுடன் ஆராய்ந்து கற்றுக்கொள்வோம். | **BTh\|Dip விருப்பு**<br>12 வாரங்கள்<br>நாள்: செவ்வாய்<br>நேரம்: பி.ப.3:00-5:00<br>ஆரம்பம்: ஏப்ரல் 25<br>புள்ளிகள்: 2<br>விரிவுரையாளர்:<br>**கே. யாபேஸ்** |

| | |
|---|---|
| **பரிசுத்த ஆவியானவரின் ஆட்தத்துவமும் செயற்பாடும்**<br>கடந்த நூற்றாண்டுகளாக பரிசுத்த ஆவியானவரை குறித்த கலந்துரையாடல், அதற்கு முன் வந்த நூற்றாண்டுகளை விட மிக அதிகமாக காணப்படுகின்றது. வேதாகமம் பரிசுத்த ஆவியானவரை குறித்து என்ன போதிக்கின்றது, பரிசுத்த ஆவியானவரை குறித்த கோட்பாடுகள் எவ்வாறு கடந்த நூற்றாண்டுகளினூடாக வளர்ச்சியடைந்தன என்பவற்றை குறித்து கற்றுக்கொள்ள வாருங்கள். விசுவாசியின் வாழ்க்கையில் அவருடைய தனித்துவமான செயலையும் சபையில் அவரது வல்லமையுள்ள பிரசன்னத்தையும் குறித்த ஆழமான அறிவை பெற இப்பாடநெறி உதவியாக அமையும்! | **BTh\|Dip கட்டாயம்**<br>12 வாரங்கள்<br>நாள்: புதன்<br>நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30<br>ஆரம்பம்: ஏப்ரல் 26<br>புள்ளிகள்: 2<br>விரிவுரையாளர்:<br>**ஜூலியன் தேவதாசன்** |

# தவணை 2 | 24 ஏப்ரல் - 31 ஜூலை 2023
# வாரநாள் வகுப்புக்கள்
## பௌதீகநிலை கல்வி

| ## கற்கை முறைகள் | **BTh\|Dip கட்டாயம்** |
|---|---|
| இறையியல் கல்வியின் பெறுமதிகள் எவை? கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்வி சார்ந்த அடிப்படை பண்புகளை கண்டறியுங்கள். இப்பாடமானது கொழும்பு இறையியல் கல்லூரியின் பாடநெறிகளையும், அவற்றை பூர்த்தி செய்வதற்கான தேவைப்பாடுகளையும் குறித்து விளக்கம் அளிக்கின்றது. இது குறிப்பெடுத்தல், விரைவாக வாசித்தல், ஆய்வு செய்தல், கட்டுரை எழுதுதல், பரீட்சைக்கான மீட்டல் போன்ற விடயங்களை முன்னெடுப்பதற்கு உங்களை ஆயத்தப்படுத்துவதோடு, நீங்கள் ஒரு சிறந்த மாணவராக திகழவும் உதவி செய்யும். | 12 வாரங்கள்<br>நாள்: வியாழன்<br>நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30<br>ஆரம்பம்: ஏப்ரல் 27<br>புள்ளிகள்: 0 (2)<br>விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்திரசேகர்** |

| ## வெளிப்படுத்தின விசேஷம் | **BTh\|Dip விருப்பு** |
|---|---|
| மக்கள் அதிக ஆர்வமாக கற்கும் ஒரு நூல். பல்வேறுபட்ட விளக்கமுறைகளை உடையதாக காணப்படுவதால் மக்கள் மத்தியில் இந்நூலை குறித்து தெளிவின்மை காணப்படுகிறது. எனவே பல்வேறு விளக்கமுறைகளையும், இறுதியியலின் மொழிநடையையும் அதனை விளக்கும் முறையையும் கற்கும் பாடம் இதுவாகும். சபை சரித்திரத்தில் உயிர் வாழ இறுதியியல் எவ்வித முக்கிய பங்காற்றியதோ அதே போன்று இன்றும் சபையின் நம்பிக்கைக்கும், உயிர் வாழ்வுக்கும் இந்நூல் அவசியம். சபையானது அதிக துன்புறுத்தலுக்கு முகம் கொடுத்த நேரத்தில் வரையப்பட்ட நூலாக இருப்பதால் இன்றும் சபை வாழ்வுக்கு முக்கியமான நூலாக கருதப்படுகிறது. | 12 வாரங்கள்<br>நாள்: வியாழன்<br>நேரம்: பி.ப.3:00-5:00<br>ஆரம்பம்: ஏப்ரல் 27<br>புள்ளிகள்: 2<br>விரிவுரையாளர்: **காமினி ஜயந்த** |

| ## கிறிஸ்தவ கோட்பாடுகளின் வரலாறு | **BTh\|Dip விருப்பு** |
|---|---|
| கிறிஸ்தவம் என்பது வாழ்க்கை முறையுடன் தொடர்புற்ற கோட்பாடெனப்படுவதுடன், இது வரலாற்று சம்பவங்களின் அடிப்படையிலான இறையியல் வினாக்களின் மூலமாக கட்டமைக்கப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து மூலம் கிடைக்கப்பெற்ற விடுதலையை பெறுவதற்கான முயற்சியானது வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டது. எனவே கிறிஸ்தவ வரலாறு முழுவதிலும் கிறிஸ்தவ சிந்தனை மற்றும் பக்தி வளர்ச்சியை நமது வாழ்க்கையின் நியாயப்பிரமாணங்களில் காணக்கூடியதாக உள்ளது. இப்பாடநெறியின் மூலமாக கிறிஸ்தவ வரலாற்றினூடாக கிறிஸ்தவத்தின் முக்கிய கோட்பாடுகளின் உருவாக்கம் பற்றி கற்றுக்கொள்வீர்கள். | 11 வாரங்கள்<br>நாள்: வெள்ளி<br>நேரம்: மு.ப.9:00-.11.15<br>ஆரம்பம்: ஏப்ரல் 28<br>புள்ளிகள்: 2<br>விரிவுரையாளர்: **ஜூலியன் தேவதாசன்** |

## தவணை 2 | 24 ஏப்ரல் – 31 ஜூலை 2023

# வாரநாள் மாலைநேர வகுப்புக்கள்

## இயங்கலை கல்வி

### வழிபாடு பற்றிய இறையியல்

**BTh|Dip கட்டாயம்**

தற்கால சபையானது ஆராதனை மீது அதீத நாட்டமுள்ளதாயிருக்கிறது. தேவனை கனப்படுத்தும் ஆராதனையை குறித்து வேதாகமம் எதனை கற்பிக்கிறது? இப்பாடமானது காயீன் ஆபேலின் ஆராதனையிலிருந்து, பழைய ஏற்பாட்டு பலி ஆராதனை, இஸ்ரவேலின் சங்கீதங்களின் பின்னணியில் புதிய ஏற்பாட்டு ஆராதனை-யையும் நடைமுறைகளையும் புரிந்துகொள்ள உதவும். வேதாகம கோட்பாடுகளின் அடிப்படையில் உங்களது ஸ்தல சபையின் ஆராதனையை மதிப்பீடு செய்ய இப்பாடம் உதவி செய்யும்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:00

ஆரம்பம்: ஏப்ரல் 25

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**நெப்போலியன் பத்மநாதன்**

## கலப்புமுறை கல்வி

### அதிர்ச்சிக்குள்ளானவர்களின் மன காயங்களை குணமாக்கல்

**BTh|Dip விருப்பு**

மன அதிர்ச்சி என்பது இதயம் மற்றும் சிந்தனையின் காயமாகும். இது குணமாகுவதற்கு பல காலங்கள் ஆவதோடு, எமது உறவுகள், எமது சரீரம், எமது எண்ணங்கள், எமது விசுவாசம் உள்ளிட்ட எமது வாழ்க்கையின் பல பகுதிகளையும் தாக்குகிறது. மன அதிர்ச்சி மற்றும் மனக்காய அனுபவங்களின் தாக்கத்தை புரிந்து கொள்வதோடு, இவ்வலியிலிருந்து குணமடைவதற்கான பாதுகாப்பான இடத்தை வழங்குவதும், குணமாக்குதலின் பயணத்தின் மூலமாக மற்றவர்களை வழிநடத்தும் தலைவர்களை சிறந்த வளவாளர்களாக பயிற்சியளிப்பதுமே இப்பாடநெறியின் நோக்கமாகும். இது வேதாகம மற்றும் உளவியல் கண்ணோட்டங்களை இணைக்கும் ஊடாடும் பாடநெறியாகும்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.3:00-5:00

ஆரம்பம்: ஏப்ரல் 26

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**ப. காந்தன்**

## இயங்கலை கல்வி

### சிறு குழுவொன்றை வழிநடத்தல்

**BTh|Dip விருப்பு**

அங்கத்தவர்களின் சாட்சியுள்ள வாழ்க்கை முறை மூலம் உயிருள்ள தேவ வார்த்தையின் வல்லமையை வெளிப்படுத்தக்கூடிய பலமும், செயற்திறனும் மிக்க சிறுகுழுக்களை கட்டியெழுப்புவதற்கு மாணவர்களை ஊக்குவிப்பதும், உதவுவதும் இப்பாடத்தின் நோக்கமாகும். இப்பாடத்தில் ஏன் ஒரு திருச்சபைக்கு சிறுகுழு ஊழியம் அவசியமானது, இதற்கான வேதாகம அடிப்படைகள் மற்றும் உபாயங்கள் எவை, இதனை எவ்வாறு அமைக்க வேண்டும், எப்படி வெற்றிகரமாக முன்கொண்டு செல்வது, ஆண்டவருடைய ஆணையை எப்படி சிறுகுழுவினூடாக நிறைவேற்ற முடியும், இதிலுள்ள சவால்கள் யாவை போன்ற விடயங்கள் ஆராயப்படும்.

11 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: பி.ப.6:00-8:15

ஆரம்பம்: ஏப்ரல் 28

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**ம. தர்ஷன்**

# தவணை 2 | 24 ஏப்ரல் – 31 ஜூலை 2023

# மாலைநேர வகுப்புக்கள்

## கலப்புமுறை கல்வி

### ரோமருக்கு எழுதிய நிருபம்

**BTh கட்டாயம்**
**Dip விருப்பு**

ரோமருக்கு எழுதிய நிருபம் அகஸ்டீன், மார்ட்டீன் லூத்தர், ஜோன் வெஸ்லி, கார்ள் பார்த் போன்றவர்களின் வாழ்க்கையில் ஆழமான மாற்றங்களை உருவாக்கியது. இஸ்ரவேல், ஜாதிகள் மற்றும் சிருஷ்டிப்பிற்கான மீட்பிற்கு தேவன் வைத்திருந்த திட்டத்தை குறித்து பவுல் இந்நிருபத்தில் அறிய தருகின்றார். கிறிஸ்துவின் சிலுவையினூடாக தேவன் எவ்வாறு அவருடைய அன்பையும், நீதியையும் நிலை நிறுத்துகின்றார் என்பதை விளங்கிக்கொள்ள ஏதுவாக இருப்பதுடன், எம்முடைய நாளாந்த வாழ்க்கைக்கு எவ்வாறு அர்த்தமுள்ளதாக அமைகின்றது என்பதையும் அறிந்து கொள்ளலாம். இதை கற்பதனூடாக உங்கள் வாழ்க்கையும் மாறக்கூடும் என்பதை குறித்து அவதானமாயிருங்கள்!

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.6:00-8:00

ஆரம்பம்: ஏப்ரல் 25

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**இரா. ஹரிஹரன்**

### மெய்யியலுக்கான அறிமுகம்

**BTh|Dip விருப்பு**

சர்வதேச ரீதியாக பெரும்பாலான சர்வகலாசாலைகளிலும் உயர் கல்லூரிகளிலும் மெய்யியல் கற்பிக்கப்படுகின்றதுடன், அநேகமான நூலகங்களில் மெய்யியல் நூல்களுக்கு முதன்மையான இடம் ஒதுக்கப்பட்டுள்ளமையானது, இது எந்தளவு முக்கியம் வாய்ந்த ஒரு தலைப்பு என்பதை நமக்கு தெளிவுபடுத்துகின்றதாக .இருக்கிறது. அத்துடன் இது மதத்துடனும், மனித வாழ்க்கையுடனும் சம்பந்தப்பட்டதாகவும் இருப்பதால், மெய்யியல் என்றால் என்ன? அதன் ஆரம்பம், மற்றும் மதத்திற்கும், மெய்யியலுக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை குறித்து ஆய்வு செய்யும் பாடமே இதுவாகும்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.6:00-8:00

ஆரம்பம்: ஏப்ரல் 26

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்திரசேகர்**

### கலாச்சாரம் கடந்த திருத்தூதுப்பணி

**BTh|Dip விருப்பு**

ஆரம்பம் முதல் இயேசுவின் நற்செய்தியானது, கலாச்சாரங்களுக்கு அப்பால் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், கலாச்சாரம் கடந்து மக்களினங்களுக்கு நற்செய்தியை அறிவித்து சீஷராக்கும்படியாக ஆண்டவர் நமக்கு கட்டளை கொடுத்துள்ளார். எனவே வேதாகமத்திற்கு உண்மையாகவும், அந்நிய கலாச்சாரத்திற்கு பொருத்தமாகவும் எப்படி கலாச்சாரம் கடந்து திருத்தூதுப்பணி ஆற்றுவது என்று அறிந்து கொள்ள இப்பாடமானது உதவும்.

12 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.6:00-8:00

ஆரம்பம்: ஏப்ரல் 27

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**திரு. ஆ. பிரேம்குமார்**

# CTS இன் வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புக்கள்

## பௌதீகநிலை கல்வி

### ஏசாயா

BTh|Dip விருப்பு

இந்த அற்புதமான தீர்க்கதரிசியின் சரித்திர பின்னணி, எழுத்தாளர், விமர்சனம் செய்யக்கூடிய விடயங்கள், ஏசாயாவின் செய்தியும் இன்றைய தினத்திற்கு அதனை எவ்வாறு பிரயோஜனப்படுத்த முடியும் என்ற விடயங்களை அரவணைக்கின்றதாக இருக்கின்றது. தேவனின் மகத்துவமுள்ள வர்ணனைகள், வரவிருக்கும் மேசியாவை குறித்த எதிர்வு கூறல்கள், அவருடைய இராஜ்யம் முழுமையாக்கப்படும் திட்டங்கள் ஆகியவற்றை குறித்து அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:15-11:15

ஆரம்பம்: ஏப்ரல் 25

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**காமினி ஜயந்த**

### துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவருக்கான ஊழியம்

BTh|Dip விருப்பு

இலங்கையில் சிறுவர் தொடர்பான விழிப்புணர்வானது மிகவும் மந்தமாகவே உள்ளது. கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களில் சிறுவர்கள் அநாவசியமாக தமது உயிர்களை இழந்தமையை நமக்கு காணக்கூடியதாக இருக்கிறது. சிறுவர் துஷ்பிரயோகம் இன்று சமூதாயத்தில் பிரபலமான பாரிய பிரச்சனையாகும். அரச கணிப்பீட்டின்படி ஒரு நாளைக்கு ஒரு பிள்ளை வீதம் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றனர். அவ்வாறான சிறுவர்களுக்கு எவ்வாறு ஊழியம் செய்வது என்பதை குறித்து இப்பாடநெறியானது உதவி செய்கிறது.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.3:00-5:00

ஆரம்பம்: ஏப்ரல் 25

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

### எப்போதும் மகிழ்ச்சியாக இருங்கள்

**பிலிப்பியர் நிருபத்தை கற்பித்தல் மற்றும் பிரசங்கித்தல்**

BTh|Dip விருப்பு

பிலிப்பியரிலுள்ள சபைக்கு எழுதிய இந்த குறுகிய நன்றி கடிதத்தில், பவுல் கிறிஸ்துவின் உயர் மதிப்பை உறுதிப்படுத்துகிறார். உரோமில் வீட்டு காவலில் இருந்தாலும், அவருடைய கடிதம் மகிழ்ச்சியையும், நன்றியையும் தருகிறதாக அமைந்திருக்கிறது. இந்த கடிதத்தை நீங்கள் ஆழமாக கற்றுக்கொள்ளும்போது, ஜெபிப்பதற்கும், ஒற்றுமையாக இருப்பதற்கும், மன ரம்மியமாக இருப்பதற்கும், கிறிஸ்துவில் பாதுகாப்பாக இருப்பதற்குமான பவுலின் ஊக்கப்படுத்தலை இனங்காணலாம்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:15-11:15

ஆரம்பம்: ஏப்ரல் 26

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**ராம் ஆறுமுகம்**

## தவணை 2 | 24 ஏப்ரல் – 31 ஜூலை 2023

# CTS இன் வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புக்கள்

## பௌதீகநிலை கல்வி

### கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் தொடர்பாடல்

BTh|Dip விருப்பு

செய்தி பரிமாற்றம் ஒரு உயர்ந்த நிலையில் இருக்கும் இக்காலத்தில், தகவல் பரிமாற்றம் அத்தியாவசியமான மதிநுட்பமுள்ளதாக இருக்கின்றது. தம்மை வார்த்தையின் ஊடாக வெளிப்படுத்திய தேவனை ஆராதிக்கும் விசுவாசிகளாகிய நாம் செய்தி பரிமாற்றத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். மனிதர் மத்தியில் உருவாகும் பிரச்சினைகளுக்கு காரணம் தகவல் பரிமாற்றத்தில் தேர்ச்சின்மையேயாகும். இப்பாடநெறி தகவல் பரிமாற்ற வழிகளை ஆராய்ந்து உங்களுடைய தகவல் பரிமாற்றும் தன்மையை சுவிசேஷ ஊழியத்திலும், தனிப்பட்ட உறவுகளிலும், தொழில் செய்யுமிடத்திலும் சிறப்பிக்கும்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.3:00-5:00

ஆரம்பம்: ஏப்ரல் 26

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**இரா. ஹரிஹரன்**

### பழைய ஏற்பாட்டிற்கான பின்னணி

BTh|Dip கட்டாயம்

பழைய ஏற்பாட்டின் நூல்களில் உள்ள பெறுமதி, வர்ணணை மற்றும் பின்னணி இந்த பாடத்தினூடாக தெளிவாக விளக்கப்படும். பண்டைய காலத்தின் கலாச்சாரம், மதம் போன்றவற்றை ஆய்வு செய்து, பழைய ஏற்பாட்டை, புதிய வடிவில் உங்களுக்கு நேரடியாக புரிந்து கொள்ளலாம்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.5:45-7:45

ஆரம்பம்: ஏப்ரல் 25

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**மகேஸ்வரன் மாணிக்கராஜா**

### எஸ்றா - நெகேமியா

BTh|Dip விருப்பு

பழைய ஏற்பாட்டில் சிறையிருப்பின் காலத்துக்கு பின்னைய சரித்திரத்தை குறித்து பேசும் இரண்டு நூல்கள் இவை மட்டுமே. இவ்விருவரும் இஸ்ரவேல் சமூகத்தின் சமய சமூக அரசியல் நிலைகளை கட்டியெழுப்ப சமகாலத்தில் பணியாற்றியவர்கள். தங்களை சூழவுள்ள உலகிலிருந்து வேறு பிரிந்து மீண்டும் எவ்விதம் தங்களை சமய ரீதியில் பலப்படுத்தலாம் என்பதை இவர்கள் இஸ்ரவேலுக்கு கற்பித்தார்கள். இயேசுவின் காலத்தில் அறியப்பட்ட யூத மதத்தின் தோற்றத்துக்கான சீர்திருத்தத்தின் அடிப்படையை வித்திட்டவர்கள் இவர்களே.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.5:45-7:45

ஆரம்பம்: ஏப்ரல் 26

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்துமணி செல்லையா**

# தவணை 3

# 4 செப்டெம்பர் – 2 டிசெம்பர் 2023

○ பௌதீகநிலை கல்வி | ◘ இயங்கலை கல்வி | ★ கலப்புமுறை கல்வி

# நேர அட்டவணை: தவணை 3 (கொஹுவல)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| **காலை** | ○ **1, 2 இராஜாக்கள்**<br>மு.ப.9:00-11:15<br>எஸ். கதிரேசப்பிள்ளை | ○ **அரசியல் பற்றிய இறையியல்**<br>மு.ப.9:00-11:00<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | ○ **ஞான இலக்கியங்களுக்கான அறிமுகம்**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>சுரேஷ் அப்பாத்துரை<br>ஐக்கிய வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **சிறிய தீர்க்கதரிசிகள்**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>ஜுலியன் தேவதாசன்<br>ஆராதனை வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **வேதாகமத்தை குறித்த கண்ணோட்டங்கள்**<br>மு.ப.9:00-11:15<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் |
| **பிற்பகல்** | | | ★ **மேய்ப்பத்துவ நிருபங்கள்**<br>பி.ப.3:00-5:00<br>ஜெயசீலன் ஜோயல் டிரோன் | ○ **வேதாகமத்தில் உள்ள மகத்தான பெண் கதாபாத்திரங்கள்**<br>பி.ப.3:00-5:15<br>வனஜா ராஜ்குமார் | ○ **சபையை ஆராதனையில் வழிநடத்தல்**<br>பி.ப.3:00-5:15<br>காமினி ஜயந்த |
| **மாலை** | | ◘ **கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல்**<br>பி.ப.6:00-8:00<br>நெப்போலியன் பத்மநாதன் | ◘ **திருச்சபையியலும் இறுதியியலும்**<br>பி.ப.6:00-8:00<br>நெப்போலியன் பத்மநாதன் | ○ **கிறிஸ்தவ வரலாறு - III**<br>பி.ப.6:00-8:15<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# நேர அட்டவணை: தவணை 3 (வடகொழும்பு)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | | **துன்புறுத்தலின் இறையியல்**<br>மு.ப.9:15-11:15<br>எஸ். கதிரேசப்பிள்ளை | **இறையியலுக்கான அறிமுகம்**<br>மு.ப.9:15-11:15<br>ஜூலியன் தேவதாசன் | | |
| பிற்பகல் | | **யோவான் எழுதிய சுவிசேஷம்**<br>பி.ப.3:00-5:00<br>வனஜா ராஜ்குமார் | **அதிக ஆற்றலுள்ள தலைவர்களின் ஏழு பழக்கங்கள்**<br>பி.ப.3:00-5:00<br>காமினி ஜயந்த | | |
| மாலை | | **தொழிற்துறையில் இறைபணி**<br>பி.ப.5:45-7:45<br>கிறிஸ்டி சாமுவேல் | **யாத்திராகமம் - உபாகமம்**<br>பி.ப.5:45-7:45<br>கே. யாபேஸ் | | |

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## தவணை 3 | 4 செப்டெம்பர் – 2 டிசெம்பர் 2023

# வாரநாள் வகுப்புக்கள்

## பௌதீகநிலை கல்வி

### 1, 2 இராஜாக்கள்

**BTh|Dip விருப்பு**

இராஜாக்களின் சரித்திர நூல்கள் யூதர்களின் வேதாகமத்தில் ஆரம்பகால தீர்க்கர்கள் என்ற பகுதியில் அடங்கியிருந்தது. இஸ்ரவேலரின் சரித்திரத்திற்கும் அப்பாற்பட்ட அநேக விடயங்கள் இப்பகுதியில் அடங்கியிருக்கிறது. தேவன் எவ்விதம் இஸ்ரவேலருடன் பேசினார் என்பதை இப்பகுதிகள் விளக்குகின்றன. இப்பகுதியில் தலைமைத்துவம், விக்கிரக ஆராதனை, வன்முறை, தீர்க்கதரிசன பணிகளின் ஆரம்பம் என்பவற்றை காணலாம்

11 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: மு.ப.9:00-11:15

ஆரம்பம்: செப்டெம்பர் 11

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**எஸ். கதிரேசப்பிள்ளை**

### அரசியல் பற்றிய இறையியல்

**திருச்சபை, அரசு, சமூகம்**

**BTh|Dip விருப்பு**

தேவனுக்கு நம்பகமாக இருக்கும் அதேவேளையில் சபையானது உலகத்தோடும் ஈடுபட வேண்டும் என்பதே இயேசு கிறிஸ்துவின் எதிர்பார்ப்பாக இருந்தது. எனவே சபையானது அரசோடு ஈடுபடுவதோடு சமூகத்தில் ஒரு தாக்கத்தை உருவாக்க வேண்டும். சபை இதனை எவ்வாறு நேர்மையாக செய்ய முடியும்? இப்பாடநெறியானது அரசு மற்றும் சமூகத்துடனான சபையின் உறவிற்கான வரையறைகளை முன் வைக்கின்றது.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:00

ஆரம்பம்: செப்டெம்பர் 5

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

### ஞான இலக்கியங்களுக்கான அறிமுகம்

**BTh|Dip விருப்பு**

இப்பாடத்தில் கவிதை, ஞான இலக்கியங்களான யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு போன்றவற்றுக்கு பொதுவான அறிமுகம் கொடுக்கப்படும். அத்துடன் ஒரு உன்னதமான காதல் கவிதையாக விளங்கும் உன்னதப்பாட்டிற்கு இலக்கிய ரீதியான விளக்கவுரை அளிக்கப்படுவதோடு, அநேகர் முழுமையாக விளங்கிக்கொள்ள சிரமப்படும் யோபு நூலும் மேலும் விரிவாக ஆராயப்படும்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30

ஆரம்பம்: செப்டெம்பர் 6

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**சுரேஷ் அப்பாத்துரை**

தவணை 3 | 4 செப்டெம்பர் – 2 டிசெம்பர் 2023

# வாரநாள் வகுப்புக்கள்

## பௌதீகநிலை கல்வி

### சிறிய தீர்க்கதரிசிகள்

BTh|Dip விருப்பு

தேவனுடைய ஊழியர்களாகிய தீர்க்கதரிசிகள் தங்களுடைய வெவ்வேறு நிலைமைகளிலும் தேவனின் மீட்பின் சரித்திரத்திலே தேவ நோக்கங்களுக்காக தேவ செய்தியை தொனிக்க செய்தார்கள். இந்த பாடத்தில், இன்று நாம் இந்த செய்திகளை விளங்கி கொள்வது எப்படி என்றும் தேவ சித்தத்தை செய்கின்றவர்களாகி, கிறிஸ்துவின் சபையை கட்டி, தேவ இராஜ்ஜியத்தின் பிள்ளைகளாக உலகிற்கு சாட்சிகளாவதை பற்றியும் கற்றுக்கொள்வோம்.

11 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30

ஆரம்பம்: செப்டெம்பர் 7

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**ஜுலியன் தேவதாசன்**

### வேதாகமத்திலுள்ள மகத்தான பெண் கதாபாத்திரங்கள்

BTh|Dip விருப்பு

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் உள்ள தந்தையை பிரதானமாக கொண்ட சமூகங்களில் தேவன் தனக்கென்று ஊழியம் செய்ய பெண்களை தெரிவு செய்தார். அவர்கள் இல்லத்தரசிகளாக, நியாயாதிபதியாக, தீர்க்கதரிசிகளாக, பணிப்பெண்களாக இருந்துள்ளார்கள். அத்துடன் அவர்கள் தேவ ஜனங்களின் வரலாற்றில் மிக முக்கிய பங்கினை வகிப்பதை நாம் காணலாம். இந்த பாடநெறி வேதத்தில் காணப்படும் பெண் கதாபாத்திரங்களை குறித்து ஆழமான ஒரு அறிவை கொடுப்பதன் மூலம் உங்களுக்கு உற்சாகமளிக்கும்; தேவனின் திட்டத்தில் உங்கள் பங்கினை குறித்து ஆராய்ந்து பார்க்கவும் வாய்ப்பளிக்கும்.

11 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.3:00-5:15

ஆரம்பம்: செப்டெம்பர் 7

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

### வேதாகமத்தை குறித்த கண்ணோட்டங்கள்

BTh|Dip விருப்பு

இப்பாடம் கிறிஸ்தவர்களாகிய எமக்கு மிகவும் அவசியமானது. ஏனென்றால் இன்று வேதாகமத்தை குறித்தும், அதன் நம்பகத்தன்மை குறித்தும் அதிகமான சந்தேகங்களும், சர்ச்சைகளும் தோன்றியுள்ளன. இதை குறித்து பலவிதமான கண்ணோட்டங்களும் உள்ளன. இவைகளை குறிப்பாக கற்றறிவதன் மூலம் நாம் தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தை குறித்து எமது விசுவாசத்தை இன்னும் பலப்படுத்தி கொள்வதோடு, வேதாகமத்தின் நம்பகத்தன்மையை மற்றவர்களுக்கு உறுதியுடன் எடுத்துக்காட்டவும் முடியும்.

11 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: மு.ப.9:00-11:15

ஆரம்பம்: செப்டெம்பர் 8

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

## தவணை 3 | 4 செப்டெம்பர் – 2 டிசெம்பர் 2023

# வாரநாள் வகுப்புக்கள்

## பௌதீகநிலை கல்வி

| | |
|---|---|
| **சபையை ஆராதனையில் வழிநடத்தல்**<br><br>ஆண்டவருடைய பிரசன்னத்திற்குள் மக்களை வழிநடத்தக்கூடிய ஆராதனை தலைவர்கள் திருச்சபைக்கு அவசியமாயிருக்கிறார்கள். இப்பாடத்தில் ஆராதனையை குறித்து வேதாகமம் என்ன கூறுகின்றது என்பதனையும், எவ்வாறு கூட்டாராதனையில் பங்குகொள்ளலாம் மற்றும் வழிநடத்தலாம் என்பதனையும் கற்றுக்கொள்ளலாம். அத்துடன் நாம் ஆராதிக்கும் ஆண்டவரின் அழகையும் மகிமையை வெளிப்படுத்தக்கூடிய அர்த்தமுள்ள புதிய வழிமுறைகளை கண்டு கொள்ளவும் இப்பாடம் துணை புரியும். | **BTh\|Dip விருப்பு**<br><br>11 வாரங்கள்<br><br>நாள்: வெள்ளி<br><br>நேரம்: பி.ப.3:00-5:15<br><br>ஆரம்பம்: செப்டெம்பர் 8<br><br>புள்ளிகள்: 2<br><br>விரிவுரையாளர்: **காமினி ஜயந்த** |

## கலப்புமுறை கல்வி

| | |
|---|---|
| **மேய்ப்பத்துவ நிருபங்கள்**<br><br>பவுலின் தீமோத்தேயு, தீத்து, பிலேமோன் நிருபங்களை கற்றுத்தரும் பாடமாகும். சபை தலைவர்களுக்கான பவுலின் கரிசனை மிகுந்த அறிவுறுத்தல்களை இந்நிருபங்களில் காணலாம். இதில் உள்ள சத்தியங்கள் இன்றைய சபையை வழிநடத்தும் தலைவர்களாகிய எமக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும். | **BTh\|Dip விருப்பு**<br><br>12 வாரங்கள்<br><br>நாள்: புதன்<br><br>நேரம்: பி.ப.3:00-5:00<br><br>ஆரம்பம்: செப்டெம்பர் 6<br><br>புள்ளிகள்: 2<br><br>விரிவுரையாளர்: **ஜெயசீலன் ஜோயல் டிரோன்** |

## தவணை 3 | 4 செப்டெம்பர் – 2 டிசெம்பர் 2023

# மாலைநேர வகுப்புக்கள்

## இயங்கலை கல்வி

### கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல்

**BTh|Dip கட்டாயம்**

கிறிஸ்தவ உலக நோக்கை விருத்தி செய்தல். “உலக நோக்கு என்பது ஒரு ஜோடி கண்ணாடிகளை போன்றது. அது நாம் பார்ப்பதையல்ல, அதனூடாக பார்ப்பதையே குறிக்கிறது” (போல் ஹிபேர்ட்). கிறிஸ்தவ சிந்தனைக்கூடாக எம்முடைய சிந்தனைகளையும் மனப்பான்மையையும் மதிப்பீடு செய்வதன் முக்கியத்துவத்தை இப்பாடநெறி ஆராய்கின்றது. உங்கள் தெரிவுகளும் நீங்கள் எடுக்கும் முடிவுகளும் உலகத்திற்கு ஒத்ததாக இருக்காமல் அதிலிருந்து விடுதலை பெறவும், உங்களில் ஆழமான மாற்றம் ஏற்படவும் இது வழிவகுக்கும் என்பது நிச்சயம்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.6:00-8:00

ஆரம்பம்: செப்டெம்பர் 5

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **நெப்போலியன் பத்மநாதன்**

### திருச்சபையியலும் இறுதியியலும்

**BTh கட்டாயம்**
**Dip விருப்பு**

சபையாக இருத்தல் என்பதை நாம் எவ்வாறு விளங்கி கொள்கின்றோம்? அது பாரம்பரியங்களா அல்லது கட்டிடங்களா அல்லது வழிபாட்டு முறைகளா? நாம் அறிந்திருக்கும் உலகம் எவ்வாறு முடிவடையும்? சபையியலும், இறுதியியலும் சபையை குறித்தும், இறுதி காலத்தை குறித்தும் சபையின் முக்கிய போதனைகளை ஆராயும் ஒரு பாடநெறியாகும். இப்பாடநெறி உங்களுக்கு உங்கள் சபையுடன் இருக்கும் ஐக்கியத்தை ஆழமாக்கி ஒன்றாக இயங்க தூண்டுவது மட்டுமல்லாது வரவிருக்கும் விடயங்களை குறித்தும் விளங்கிக்கொள்ள உதவும் முக்கியமான பாடநெறியாகும். இப்பாடநெறியை தவற விடாது கட்டாயமாக கற்றுக்கொள்வது நன்று.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.6:00-8:00

ஆரம்பம்: செப்டெம்பர் 6

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **நெப்போலியன் பத்மநாதன்**

## பௌதீகநிலை கல்வி

### கிறிஸ்தவ வரலாறு - III

**BTh|Dip கட்டாயம்**

**19ஆம், 20ஆம் நூற்றாண்டுகள்**

“தனது சரித்திரத்தை அறியாத ஒரு சமூகம் ஞாபகமற்ற ஒரு மனிதனுக்கு சமம்”. சரித்திரத்தில் சபை கண்ட வெற்றிகளையும் தோல்விகளையும், தேவனின் செயற்பாட்டையும் கிறிஸ்தவர்கள் அறிந்திருப்பது அவசியமானது. இப்பாடமானது 1800 இலிருந்து இன்று வரையான காலப்பகுதியின் திருச்சபையின் செயற்பாட்டையும் முன்னேற்றத்தையும் ஆராய்கின்றது.

11 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.6:00-8:15

ஆரம்பம்: செப்டெம்பர் 7

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

## தவணை 3 | 4 செப்டெம்பர் – 2 டிசெம்பர் 2023

# CTS இன் வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புக்கள்

## பௌதீகநிலை கல்வி

**BTh|Dip விருப்பு**

### துன்புறுத்தலின் இறையியல்

இருபதாம் நூற்றாண்டானது, அதற்கு முன்னைய அனைத்து நூற்றாண்டுகளையும் விட அதிகமாக இரத்த சாட்சிகளை கண்டது. “நீதியின் நிமித்தமான துன்பப்படுதல்” குறித்து வேதாகமம் என்ன கூறுகிறது? - திருச்சபை ஏன் துன்புறுத்தப்படுகிறது மற்றும் அத்துன்புறுத்தலுக்கு எவ்வாறு மாறுத்தரம் அளிக்க வேண்டும்? என இந்த பாடநெறியானது இவற்றுக்கான பதில்களை வேதாகம ரீதியாக ஆராய்வதுடன், உலகத்தில் உள்ள திருச்சபைகளில், சில வரலாற்று மற்றும் தற்போதைய துன்புறுத்தல் சூழ்நிலைகளை ஆராய்ந்து உரிய வகையில் மாறுத்தரம் அளிக்கத்தக்க விதமாக விசுவாசிகளை தயார்படுத்துகிறது.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:15-11:15

ஆரம்பம்: செப்டெம்பர் 5

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**எஸ். கதிரேசப்பிள்ளை**

**BTh|Dip விருப்பு**

### யோவான் எழுதிய சுவிசேஷம்

“ஒரு பிள்ளை நீந்தக்கூடியதும், யானை நீந்தக்கூடியதுமான ஒரு குளமே யோவானின் சுவிசேஷம்” (லியோன் மொரிஸ்). சுவிசேஷத்தை வழங்கும் இந்த தனித்துவம் மிகு முறையில், யோவான் எமக்கு வரலாற்று ரீதியான இயேசுவை குறித்தும், அவரின் போதனைகளை குறித்தும் விலைமதிப்பற்ற அறிவை தருவதை காணலாம். முக்கியமான கிறிஸ்தவ கொள்கைகளை ஆராய்கின்ற அே-தவேளை, யோவான் சீஷத்துவதிற்கான ஒரு உறுதியான அழைப்பை விடுக்கின்றார்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.3:00-5:00

ஆரம்பம்: செப்டெம்பர் 5

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

**BTh|Dip கட்டாயம்**

### இறையியலுக்கான அறிமுகம்

**கிறிஸ்தவ அடிப்படை விசுவாச கோட்பாடுகள்**

எங்கள் விசுவாசமே எங்கள் வாழ்க்கையை தீர்மானிக்கும்! நாம் எதனை விசுவாசிக்கிறோம் என்பது நம்மில் பலருக்கு தெரிந்திருந்தாலும், அநேகர் அதனை தெளிவாக அறியாதிருக்கின்றார்கள். நீங்கள் கிறிஸ்தவ கோட்பாடுகளை மற்றொருவருக்கு விளக்க ஆரம்பித்து இறுதியில் தடுமாறும் நிலைக்கு ஆளாகியிருக்கிறீர்களா? இப்பாடம் கிறிஸ்தவ கோட்பாடுகளை குறித்து ஒரு தெளிவான விளக்கத்தை உங்களுக்கு தருவதோடு மற்றவர்களுக்கு அதனை நம்பிக்கையுடன் விளக்கவும் உதவி செய்யும்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:15-11:15

ஆரம்பம்: செப்டெம்பர் 6

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

# தவணை 3 | 4 செப்டெம்பர் – 2 டிசெம்பர் 2023

# CTS இன் வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புக்கள்

## பௌதீகநிலை கல்வி

## அதிக ஆற்றலுள்ள தலைவர்களின் ஏழு பழக்கங்கள்

**BTh|Dip விருப்பு**

தலைமைத்துவம் என்றால் ஒரு பதவி அல்ல. அது செய்து முடிக்க வேண்டிய ஒரு பணியாகும். கடவுள் தந்திருக்கும் இந்த நீண்டகால பணியில் ஒரு கிறிஸ்தவ தலைவன் எவ்வாறு சிறப்பாக செயற்பட வேண்டுமென்பதே எமக்கிருக்கும் மிகப்பெரிய சவாலாகும். “தாக்கமுள்ள தலைமைத்துவத்தின் 7 பண்புகள்” எனும் இப்பாடமானது, Stephen Covey அவர்கள் எழுதிய "7 Habits of Effective Leaders" என்ற ஆங்கில நூலின் ஓர் ஆய்வாகும். நீங்களும் ஒரு தாக்கமுள்ள தலைவனாக மாற இப்பாடம் உங்களுக்கு உதவி செய்யும்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.3:00-5:00

ஆரம்பம்: செப்டெம்பர் 6

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**காமினி ஜயந்த**

## தொழிற்துறையில் இறைபணி

**BTh|Dip விருப்பு**

அநேக கிறிஸ்தவப்பணிகள் திருச்சபையை சுற்றி அல்லது திருச்சபையின் உருவாக்கமாகவே இருக்கின்றது. இருப்பினும், போதகர் ஒருவரின் பெரும்பாலான நேரம் மதசார்பற்ற தொழில் ஸ்தாபனங்களில் வேலை செய்வோரை சுற்றியே செலவிடப்படுகிறது. வேதாகம காலத்தில் மக்கள் சந்தைவெளி எனப்படும் இவ்வாறான இடங்களிலேயே அதிக நேரத்தை செலவழித்தனர் (அப்போஸ்தலர் 17:16-19). நீங்கள் அதிக நேரம் செலவிடும் உங்கள் தொழில் ஸ்தாபனத்திலும். அதை சுற்றியும் ஆதாயப்படுத்தும் பணியை செய்வதற்காக ஓர் தரிசனத்தை வைத்திருப்பது முக்கியமானதோர் திறனாகும். இப்பாடநெறியானது அப்படியான தொழில் துறையிலுள்ள இறைபணி குறித்த புரிந்துணர்வையும், அதனை எவ்வாறு ஆரம்பிக்க வேண்டுமெனவும், அவ்வாறான பணிகளில் எவ்வாறு ஈடுபட வேண்டுமென்றும் கற்றுத்தரும்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.5:45-7:45

ஆரம்பம்: செப்டெம்பர் 5

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்டி சாமுவேல்**

## யாத்திராகமம் - உபாகமம்

**BTh|Dip விருப்பு**

பண்டைய இஸ்ரவேலரின் ஆரம்பம், அடிமைத்தனம், உருவாக்கம் பற்றி பெரிதும் அறியத்தரும் பஞ்சாகமத்தின் (மோசேயின் புத்தகங்கள்) முக்கியமான பகுதிகளை கற்பதற்கு இந்த பாடநெறியானது உங்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்கும். ஒவ்வொரு புத்தகத்தின் தன்மைகள், அமைப்புகள், இஸ்ரவேல் இனத்திற்கான அதன் செய்தி மற்றும் அவற்றை இன்று எவ்வாறு நாம் நடைமுறைப்படுத்தலாம் போன்ற விடயங்கள் ஆராயப்படும்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.5:45-7:45

ஆரம்பம்: செப்டெம்பர் 6

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**கே. யாபேஸ்**

# விரிவுரையாளர் விபரங்கள்



**செல்லதுரை ஜோ. சந்ரசேகர்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்விப்பீட உறுப்பினரும், பட்டதாரியுமான இவர், கொரிய சர்வதேச இறையியல் கல்லூரியில் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் கிறிஸ்தவம் என்ற பாடநெறியில் சான்றிதழை பெற்றவராவார். வத்தளை, சீயோன்மலை கூடார திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் தலைமை போதகருமாவார். அத்துடன் வடகொழும்பு போதகர் ஐக்கியத்தின் செயலாளர் நாயகமாகவும் கடமையாற்றுகிறார்.



**இரா. ஹரிஹரன்,** BTh, MMin
**கொழும்பு இறையியல் கல்லூரியின் விரிவாக்கல் நிலையங்களின் முகாமையாளரான இவர்,** சிங்கப்பூர் திரித்துவ இறையியல் கல்லூரியில் இளமாணி, முதுமாணி பட்டங்களை பெற்றுள்ளதுடன், மிக நீண்ட காலமாக இளைஞர் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். வெள்ளவத்தை மூர் வீதியில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**வி. கிறிஷாந்தி சந்ரசேகர்,** Dip (Counselling), BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியும், சமூக அபிவிருத்தி தேசிய நிறுவனத்தின் (National Institute of Social Development) ஆற்றுப்பணியில் பட்டச்சான்றிதழை பெற்றவருமான இவர், குடும்பங்கள் மத்தியிலே ஆற்றுப்பணியிலே ஈடுபட்டு வருகிறார். வத்தளை, சீயோன்மலை கூடார திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் நிர்வாக சபையின் காரியதரிசியாகவும், ஞாயிறு பாடசாலை கண்காணிப்பாளராகவும், தெமட்டகொட, கிரேஸ் வேதாகம நிறுவனத்தின் வேதாகம கல்வி ஆசிரியராகவும் கடமையாற்றுகின்றார்.



**ஜூலியன் தேவதாசன்,** BTh, MDiv
கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்விப்பீட உறுப்பினரான இவர், இலங்கை தென்னாசிய இறையியல் கல்லூரியினதும் (SAIT), தென் கொரியாவின் இறையியல் கல்வி மற்றும் தூதுப்பணிக்கானதுமான ஆசிய மத்திய நிலையத்தினதும் (ACTS) பட்டதாரியாவார். இலங்கை தென்னாசிய இறையியல் கல்லூரியினது கல்விப்பீடாதிபதியாகவும் ஹொம்சா லங்காவின் (HOMSA LANKA) இயக்குனராகவும் பணியாற்றியுள்ளார். சர்வதேச ஊழிய களங்களிலும் தூதுப்பணிகளிலும் பங்குக்கொள்ளும் இவர் கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகள் (AMBASSADORS FOR CHRIST INTERNATIONAL) என்ற சர்வதேச அமைப்பின் ஊழிய உறுப்பினராக திகழ்கின்றார். இரு தசாப்தங்களாக இறைபணியிலே ஈடுபட்டு கொண்டிருக்கிறார். இவர் சிலாபம், புனித யாக்கோபின் (St.James) திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**வனஜா ராஜ்குமார்,** BTh
**கொழும்பு இறையியல் கல்லூரியின் உதவி நூலகவியலாளராகவும், வடகொழும்பு நிலையத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றி வருகிறார்.** அத்துடன் கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்விப்பீட உறுப்பினருமாவார். அத்துடன் பெண்கள் மற்றும் சிறுவர் ஊழியங்களில் ஈடுபட்டு வருவதுடன், இலங்கை வேதாகம சங்கத்தின் 'Master Facilitator in Healing the Wounds of Trauma Children' பயிற்சியை பெற்றவரும், "தாயின் வடிவமைப்பு" என்பதின் சிரேஷ்ட வளவாளருமாவார். சத்திய வசனம் நிறுவனத்தின் தமிழ்ப்பிரிவு நிர்வாக ஒருங்கிணைப்பாளராக நான்கு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இவர், கொழும்பு-13, ஜிந்துப்பிட்டி, புனித தோமாவின் ஆலயத்தினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**மகேஸ்வரன் மாணிக்கராஜா,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் கொழும்பு, மக்கள் தேவ சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் போதகராகவும் பணியாற்றி வருகின்றார்.



**கிறிஸ்ரி பாலேந்திரன்,** BD, Certificate in Counselling CWR-UK, MA (candidate)
இவர் சேராம்பூர் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியும், சர்வதேச வேதாகம கழகத்தின் இலங்கைக்கான இயக்குனருமாவார். கற்பித்தல் பணியில் நீண்ட கால அனுபவமுடையவரும், பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியருமாவார். இவர் மூர் வீதியிலுள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**திரு. ஆ. பிரேம்குமார்,** BTh, BSc
(ச்)சிசெல் (Chisel) (உளி) என்ற நிறுவனத்திற்கு தலைமைத்துவம் வழங்குகிறார். இந்த நிறுவனமானது அருட்பணி, மற்றும் சீஷர்களை உருவாக்குகின்ற மற்றும் சந்தைவெளி ஊழியத்தில் (Marketplace ministry) ஊழியத்தில் அவதானம் செலுத்துகின்றது. இவர், இதற்கு முன்னர் சத்திய வசனம் நிறுவனத்தில் 23 வருடங்களும், சுதேச அருட்பணி ஸ்தாபனமான குளோபல் இம்பேக்ட் அருட்பணி ஊழியத்தின் நிர்வாக இயக்குனராக ஏறத்தாழ 15 வருடங்களும் பணியாற்றியுள்ளார். இவர் 24 தமிழ் கிறிஸ்தவ நூல்களின் ஆசிரியருமாவார். அவற்றில் 11 நூல்கள் சிங்கள மொழியிலும் ஒரு நூல் ஹிந்தி மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவர் தென்னாசிய அருட்பணி முன்னேற்ற வலையமைப்பின் (SAMA Link http://samalink.org/) ஒருங்கிணைப்பாளராகவும் சிம்ப்லி மொபிலைசிங் (Simply Mobilizing) இயக்கத்தின் இலங்கை ஒருங்கிணைப்பாளராகவும் செயற்படுகிறார்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**நெப்போலியன் பத்மநாதன்,** BTh, MTh, PhD

கொழும்பு இறையியல் கல்லூரியின் இணைக்கல்வியின் முன்னாள் முகாமையாளராகவும் கல்விப்பீட உறுப்பினராகவும் பணியாற்றிய இவர் இக்கல்லூரியின் பட்டதாரியுமாவார். ஐக்கிய இராஜ்ஜிய வேல்ஸ் தேசத்து Glamorgan பல்கலைக்கழக முதுமாணி பட்டத்தை பெற்ற இவர், தற்போது கற்பித்தல் மற்றும் பிரசங்க பணியில் ஈடுபட்டு வருகிறார். காலிமுகம், கிறிஸ்துநாதர் ஆலயத்தினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**கிறிஸ்துமணி செல்லையா,** DipEng (Mech), BTh, MA

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் Campus Crusade நிறுவனத்தின் பல்கலைக்கழக ஊழியத்தின் நிதி முகாமையாளராகவும், சபை ஸ்தாபித்தல் இயக்கத்தின் இணைப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். நீண்ட காலமாக முழுநேரப்பணியில் ஈடுபட்டு வரும் இவர் தற்பொழுது இரட்சணியசேனை சபையின் கல்வி இணைப்பாளராகவும், சபைகளில் சீஷத்துவ பயிற்சியளித்தல், கற்பித்தல், பிரசங்கித்தல், வேதாகம கல்லூரிகளில் கற்பித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகிறார். கொழும்பு, கொம்பனித்தெரு, இரட்சணியசேனை திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**சுரேஷ் அப்பாத்துரை,** BTh, MA


செரம்பூர் வேதாகம கல்லூரியினதும் சிங்கப்பூர் வேதாகம கல்லூரியினதும் பட்டதாரியான இவர் ஹெப்ரோன் வேதாகம ஊழியத்தின் ஸ்தாபக தலைவரும், அவானா சிறிலங்காவின் தேசிய இணைப்பாளருமாவார். கொள்ளுப்பிட்டி, மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**காமினி ஜயந்த,** BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியும், வடகொழும்பு கல்வி நிலையத்தின் நிர்வாக ஒருங்கிணைப்பாளருமான இவர், Raga-ma, Thuduwegedera இலுள்ள Prayer Tower Church இனை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், வேதாகம ஆசிரியராகவும் அங்கு கடமையாற்றுகிறார். இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று வேதாகம பாடங்களையும் பிரசங்கங்களையும் பண்ணுவதுடன் போதை பொருட்களுக்கு அடிமையாயுள்ளவர்களை புனரமைக்கும் சேவையிலும் ஈடுபட்டு வருகிறார். அத்துடன் கொழும்பு இரட்சணியசேனை மற்றும் தெமட்டகொட Kings Bible Schoolஇலும் வேதாகம ஆசிரியராக கடமை புரிகிறார்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**எஸ். கதிரேசப்பிள்ளை,** BD, MTh
இவர் கல்குடா சுவிசேஷ பயிற்சி நிலையத்தின் அதிபராகவும் மெதடிஸ்த சபையின் வடகிழக்கு பிரதேச தலைவராகவும், திருப்பேரவை காரியதரிசியாகவும் கடமையாற்றியுள்ளதுடன் நீண்டகாலமாக மெதடிஸ்த திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் போதகராகவும் பணியாற்றி வருகின்றார்.




**கே. யாபேஸ்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் AOG திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் போதகராக பணியாற்றுவதுடன், திருச்சபைகளில் கற்பித்தல், பிரசங்கித்தல் தலைமைத்துவ பயிற்சியளித்தல், வேதாகம கல்லூரியில் கற்பித்தல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார்.



**ப. காந்தன்,** BTh, MSW
கொழும்பு இறையியல் கல்லூரியின் இளமாணி பட்டதாரியான இவர், தேசிய சமூக நிறுவனத்தில் உளவளத்துணை பட்டச்சான்றிதழினையும் நிறைவு செய்து, தற்போது சமூகப்பணிக்கான முதுமாணியினை தொடர்கின்றார். 20 வருடங்களாக கிறிஸ்துவுக்காக இளைஞர் அமைப்பில் பணியாளராகவும் தேவனின் பணியை தொடர்கின்றார்.



**ம. தர்ஷன்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், யாழ் கல்வி நிலையத்தின் நிர்வாக இணைப்பாளராக பணியாற்றி வருகிறார். சரசாலை, தேவ சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ள இவர், அதன் போதகராக சேவையாற்றுவதுடன், வாலிபர்கள் மத்தியில் தேவ பணியை மேற்கொண்டும் வருகிறார்.



**ராம் ஆறுமுகம்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் வர்த்தக துறையில் 25 வருடங்களுக்கு மேலாக கணக்காளராகவும் நிர்வாகியாகவும் கடைமையாற்றியதுடன் கொழும்பு மக்கள் தேவசபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டு 30 வருடங்களாக அதின் போதகராகவும் பணியாற்றி வருகின்றார்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**ஜெயசீலன் ஜோயல் டிரோன்,** BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரி. ஐந்து வருடங்களுக்கு மேலாக தனியார் பெருநிறுவனங்களில் நிதி மற்றும் நிர்வாக துறையில் தொழில் புரிந்தவர். அநேக வருடங்களாக கொழும்பு சுவிசேஷ கூடார சபையின் வாலிபர் ஐக்கியத்தின் தலைவராகவும் போதகர் குழுவின் அங்கத்தவராகவும் பணி புரிந்துள்ளார். தற்போது திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கிறிஸ்துவின் ஜெபவீடு திருச்சபையின் உதவி போதகராகவும், ஆசிரியராகவும் பணியாற்றுகிறார்.



**கிறிஸ்டி சாமுவேல்,** EPCM, BE, MA

Mission to Asia (இந்தியா), Infinity Centre for Higher Studies (இலங்கை) ஆகியவற்றின் ஸ்தாபக இயக்குனராவார். இந்தியாவின், எம்.கே பல்கலைக்கழகம் (கணணி விஞ்ஞான தொழிநுட்பவியல் [BE]), புனித. பவுல் இறையியல் கல்லூரி (பிரயோக இறையியலில் முதுமாணி), மார்ட்டின் லூத்தர் பல்கலைக்கழகம் (கிறிஸ்தவ முகாமைத்துவ கற்கைநெறி) போன்றவற்றில் பட்டம் பெற்றவராவார். தெற்காசியாவின் பல்தரப்பட்ட திருத்தூதுப்பணி செயற்பாடு அமைப்புகளின் உறுப்பினரும், இலங்கையில் தகவல் தொழில்நுட்ப கைத்தொழில் அமைப்பு நிர்வாகக்குழுவின் அங்கத்தவருமாவார் (கல்விப்பிரிவு). வெள்ளவத்தை, மூர் வீதியில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொணடுள்ளார்.

# CTS கற்கைநெறிகள்

நீங்கள் உங்களது தனிப்பட்ட விருப்பத்தின்படி பாடநெறிகளை தெரிவு செய்தாலும்கூட, ஆகக்கூடிய பயனை பெற்றுத்தரக்கூடிய வகையில் கொழும்பு இறையியல் கல்லூரி வழங்கும் ஒரு கற்கைநெறிக்கு உங்களை பதிவு செய்து கொள்ளுவதை குறித்து சிந்திக்கும்படி நாம் உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

கொழும்பு இறையியல் கல்லூரி மூன்று மட்டங்களில் கற்கைநெறிகளை வழங்குகின்றது. இவையனைத்தும் ஆசிய இறையியல் சங்கத்தினால் (Asia Theological Association) அங்கீகரிக்கப்பட்டவையாகும். உங்களுக்கு அதிகளவு பயனை தரக்கூடிய கற்கைநெறி எதுவென்பதை கண்டறியுங்கள்:

**கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ் (CCS)**
இது வாழ்க்கை பயணம், தொழில் மற்றும் ஊழியம் ஆகியவற்றிற்கு 21ஆம் நூற்றாண்டிலுள்ள கிறிஸ்தவர்களை ஆயத்தப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
வகுப்புக்கள்: தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தனித்தனியே நடைபெறும்.
*தேவைப்படும் மொத்த புள்ளிகள்: 36*

**இறையியல் பட்டச்சான்றிதழ் (DipTh)**
இது கிறிஸ்தவ ஊழியர்கள் ஊழியத்திற்கு தேவையான ஆழமான வேதாகம அறிவு மற்றும் செயற்திறன்களை, பெற்றுக்கொண்டு தங்களை ஆயத்தப்படுத்தும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.
வகுப்புக்கள்: தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தனித்தனியே நடைபெறும்.
*தேவைப்படும் மொத்த புள்ளிகள்: 72*

**இறையியல் இளமாணிப்பட்டம் (BTh)**
இது கிறிஸ்தவர்களை சபையின் தலைமைத்துவத்திற்கு (மேய்ப்பத்துவம், கற்பித்தல் அல்லது அது போன்ற ஏனைய ஊழியங்கள்) பயிற்றுவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
வகுப்புக்கள்: தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தனித்தனியே நடைபெறும்.
*தேவைப்படும் மொத்த புள்ளிகள்: 108*

**மேலதிக தகவல்கள் மற்றும் உதவிக்கு தொடர்பு கொள்க:**
கல்விசார் காரியாலயம்
011-5524257; registrar@cts.lk; www.cts.lk

**வடகொழும்பு கல்வி நிலையம்:**
280/1, டீ ஜோர்ஜ் ஆர். டீ சில்வா மாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13.

# மறுசீரமைப்பு

மறுசீரமைக்கப்பட்ட ஆரோக்கியமான ‘பரதீசுவை’ காண
நீங்கள் வாஞ்சிக்கிறீர்களா?
சகலத்தையும் புதிதாக்குவேன் என்று தேவன் கூறிய
வார்த்தை வாக்குத்தத்தம் அளிக்கிறது.
கொழும்பு இறையியல் கல்லூரியில்,
தேவனின் வார்த்தையால் வடிவமைக்கப்படுவதில்
ஆர்வமுள்ள இறையியல் கற்கும்
சமூகத்தின் ஒரு பகுதியாக இருப்பதற்கான வாய்ப்பை
நீங்கள் பெறுவதன் மூலமாக,
நாம் திருச்சபையாக தேவன் தரும்
நிலைமாற்றத்தின் முகவராக காணப்படுவோம்.

2023ஆம் வருடத்தில் கொழும்பு இறையியல் கல்லூரிக்கு
வருகை தாருங்கள்,
நாம் ஒன்றாக இணைந்து ஒரு அமைப்பு மாற்றத்தை
செய்வோம்.
அது நம் வாழ்நாளிலும் அதற்கு அப்பாலும்
நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும்.

189 துடுகமுனு வீதி, கொஹுவலை | 011 5524257 | registrar@cts.lk | www.cts.lk